# சத்திய வேத பாதுகாவலன்

கத்தோலிக்க வார வெளியீடு

(செய்தித்தாளாகப் பதிவுபெற்றது)


> வஞ்சம் தீர்த்தல் ஆரம்பத்தில் இனிக்கும்; ஆனால் சற்று நேரத்தில் கசப்பாக மாறிவிடும். அது எய்தவனையே கொல்லும் அம்பாகும்."
>
> —மில்றன்.


96-ம் புத். | 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந் திகதி சனிக்கிழமை — பிரதிசதம் 15 | 24-ம் இல


# சனி, ஞாயிறு விடுமுறை ஆவணி எட்டாந்திகதி முதல்

சனி, ஞாயிறு தினங்களை முன்போல விடுமுறைத் தினங்கள் ஆக்குவதெனவும், பௌர்ணமித் தினத்தைப் போயா விடுமுறைத் தினமாக்கிச் சனியையும (அரைநேரம்) ஞாயிறையும் வாராந்த விடுமுறைத் தினங்கள் ஆக்குவதென்றும் ஏனைய போயா தினங்களில் வழமைபோல் வேலைகள் நடைபெற வேண்டுமென்றும் பிரதமர் தலைமையில் சென்ற 27ஆம் திகதி கூடிய அரசாங்க பாராளுமன்றக் குழுவின் விசேஷ கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது. இம்மாதம் 9ஆம் திகதியன்று பாராளுமன்றம் கூடியதும் அதிலே சனி ஞாயிறு விடுமுறை சம்பந்தமான பிரேரணை கொண்டுவரப்படும். எதிர்வரும் ஆவணி மாதம் 8-ம் திகதி முதல் இத் திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவர அரசாங்கம் எண்ணியிருப்பதாக அறிகின்றோம்.

## நோயாளரைப் பார்வையிடும் நேரம்

யாழ்ப்பாணம், அரசினர் பெரிய ஆஸ்பத்திரியிலே நோயாளரைப்பார்வையிடும்நேரம் ஊரடங்குச்சட்டம் நடைமுறைக்கு வருமுன் இருந்தது போல சென்ற ஆனிமாதம் 26-ம்தேதிமுதல் மாற்றப்பட்டுள்ளது. நண்பகல் 12மணிக்கும், 1மணிக்குமிடையிலும், பிற்பகல் 5மணிக்கும் 6மணிக்குமிடையிலும் வழமைபோல நோயாளர்களை அவர்களின் உறவினரும், பிறரும் ஆஸ்பத்திரி வாட்டுகளுக்குச் சென்று பார்வையிடலாம்.

## புதிய தடைகள்

பௌர்ணமித் தினங்களில் தவறணைகள், மதுபானக் கடைகள், மது விற்பனைசெய்யும் ஹோட்டல்கள், புக்கிகள், மாமிசக் கடைகள், கிளப்புகள் எதுவுமே திறக்கப்படக்கூடாதெனத் தடைவிதிக்கப்பட்டிருக்கிறது அரசாங்கம் செய்துள்ள இந்த முடிவின்படி இத் தடையை மீறுகிறவர்களுக்கு 1,000 ரூபாவுக்குக் குறையாத அபராதமும், இரு வருடங்களுக்கு மேற்படாத சிறைத்தண்டனையும் விதிக்கப்படும். மேலும் பௌர்ணமித் தினமன்று அரசாங்க அதிகாரிகள், மந்திரிகள், பாராளுமன்ற அங்கத்தவர்கள் எவரும் உத்தியோக அலுவல்களைச் செய்வதும், அரசியல்வைபவங்களில் கலந்துகொள்வதும் தடை செய்யப்படும்.

## வட்டாரந்தோறும் வாசிகசாலை

யாழ்ப்பாண மாநகரசபையின் 23வட்டாரங்கள் ஒவ்வொன்றிலும் ஒவ்வொரு வாசிகசாலையும், பூங்காவும் அமைக்கப்படவிருக்கின்றன. இத் திட்டத்தின்படி முதல் வாசிகசாலையும், பூங்காவும் முஸ்லீம்வட்டாரத்தில் அமைக்கப்படவுள்ளன. இவற்றின் ஆரம்பவேலைகள் இம்மாத இறுதியில் நடைபெறுமென அறியக்கிடக்கிறது.

## சந்தர்ப்ப விடுமுறை

பயங்கரவாத நடவடிக்கைகள் தொடங்கிய நாள்முதல் ஆசிரியர்களுக்குரிய சந்தர்ப்ப விடுமுறை நிறுத்திவைக்கப்பட்டிருந்தது. இந்த விடுமுறையை அவர்கள் மீண்டும் பெறுவதற்குக் கல்வி அமைச்சு அனுமதிவழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

## லங்காராணி வருகிறது

இலங்கைக் கப்பல் கூட்டுத்தாபனத்தின் முதலாவது கப்பலான 'லங்காராணி' இந்த மாத நடுப்பகுதியில் 14,000 தொன் கோதுமைமாவுடன் முதன்முறையாக இலங்கை வந்து சேரவிருக்கிறது. இலங்கை மா ஆலைக் கூட்டுத்தாபனத்திற்கென்று ஆஸ்திரேலியாவிலிருந்து கோதுமை ஏற்றிக்கொண்டு அது வரவிருக்கிறது.

## புதிய பஸ் சாரதிகள்

தற்போது இலங்கைப்போக்குவரத்துச்சபையில சாரதிகள் பற்றாக்குறை இருப்பதாலும், இந்தியாவிலிருந்து மேலும 1,500 பஸ்கள் தருவிக்கப்படவிருப்பதாலும் போக்குவரத்துச்சபை புதிதாக 600 பஸ் சாரதிகளை நியமனஞ்செய்யவிருக்கிறது.

## ஹெலிகொப்ரர் விமானங்கள்

வடபகுதியிலே கள்ளக்குடியேற்றத்தையும், கள்ளக்கடத்தலையும் தடுக்கும் வேலையில் நான்கு ஹெலிகொப்ரர் விமானங்களையும், நூறு கடற்படை வீரர்களையும் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது வல்வெட்டித்துறைக்கும், மன்னாருக்குமிடையிலுள்ள கடற்கரைப்பகுதிகளில் இந்தக்காவல் நடைபெறும்.

## இறால் ஏற்றுமதி

கிழக்கு மாகாணக்கரையோரப்பகுதிகளில், குறிப்பாக மட்டக்களப்புக் கரையோரப்பகுதியில தொகையாகக் கிடைக்கும் மட்டு இறால்களைப் பெருமளவில் சேகரித்துப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் முயற்சியில் மீன்பிடி கூட்டுத்தாபனம் ஈடுபட்டுள்ளது. ஆரம்ப நடவடிக்கையாகச் சென்றமாதம் 40,000 தொன் இறால் பிரான்சுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அடுத்த வாரமும் சுமார்50,000தொன் இறால் அங்கு அனுப்பிவைக்கப்படவிருக்கிறது.

## ஜி. சி. ஈ. பரீட்சை

வருகிறமார்கழிமாதம்நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. சாதாரண தராதரப்பத்திரப் பரீட்சைக்கான விண்ணப்பப்பத்திரங்கள் இந்த ஆடிமாதம்31ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படுமென்று பரீட்சைக் கமிஷனர் அறிவித்திருக்கின்றார்.

## யாழ்ப்பாணக் கோட்டை

யாழ்ப்பாணக் கோட்டையைச்சுற்றிப் பிரகாசமான மின்விளக்குகள் ஏற்றி அப்பகுதியைப் பொதுமக்கள் மாலைவேளை பொழுதுபோக்குமிடமாக மாற்றுவதற்கான நடவடிக்கையை யாழ்ப்பாண மாநகரசபை மேற்கொண்டுவருகிறது. அப்பகுதியிலே அவர்கள் தங்கியிருந்து காற்றுவாங்கக்கூடிய வகையில் சிமெந்து ஆசனங்களும் அமைக்கப்படவிருக்கின்றன.

### தொழிற்கல்வி ஆவசியம்

ஜி. சி. ஈ. பரீட்சையிலே தொழிற்கல்வியில் சித்திபெறும் மாணவர்களுக்கே பல்கலைக்கழகத்தில் சேரும்வாய்ப்பு எதிர்காலத்தில் அளிக்கப்படும்; இதற்கமையக் கல்வித் திட்டம் மாற்றியமைக்கப்படவிருக்கிறதென்று கல்விப்பகுதியின் மேலதிக நிரந்தரச் செயலாளர் திரு. கே. எச். எம். சுமதிபால தெரிவித்திருக்கின்றார்.

## கல்லூரி அதிபரின் கட்டுப்பாடு

கொழும்பு, -ரோயல் கல்லூரி அதிபர் திரு. டி. ஜி. வெலிக்கல அவர்கள் தமது மாணவர்கள் குருவிக் கூடு போன்ற தலைமுடி வளர்த்து, கிருதா மீசை, தாடி ஆதியாம் அலங்கோலங்களுடன் கல்லூரிக்கு வரக்கூடாதெனக் கண்டிப்பாக உத்தரவிட்டிருக்கின்றார். அதாவது மாணவர்கள் ஹிப்பிகள் மோடியில நீளமான முடி வளர்த்திருக்கக்கூடாது. தலைமுடி கௌரவமான முறையில் ஒழுங்காக வெட்டி வாரிவிடப்படவேண்டும். கன்னங்களில் கிருதா வளர்த்திருக்கக்கூடாது; மீசை தாடி வளர்க்கக்கூடாது; சகலரும் நீல நிறக் காற்சட்டையும், வெள்ளை நிறச் சேட்டும் அணிந்து — அல்லது வெள்ளை நிறக் காற்சட்டையும், சேட்டும் அணிந்து வரவேண்டும்; வர்ணச் சேட்டுகள், காற்சட்டைகள் போன்றவற்றைக் கல்லூரிக்கு வரும்போது அணிவதை முற்றாகத் தவிர்க்க வேண்டும் எனவே அவர் விதித்துள்ள கட்டுப்பாடுகளாகும்.

### மெயில் றெயில்மூலம் தபால்

இந்த ஆடிமாதம் 3ஆம் திகதியிலிருந்து சகல தபால்களும் முன்போல இரா றெயில்கள் மூலம் அனுப்பப்படுகின்றன. யாழ்ப்பாண மெயில் றெயில் இரவு 7-15 மணிக்குக் கொழும்புக் கோட்டையிலிருந்து புறப்படுகிறது. யாழ்ப்பாணத்துக்கு அனுப்பப்படும் தபால்கள் கொழும்புப் பெரிய தபாற்கந்தோரில மாலை 6மணிவரை ஏற்றுக்கொள்ளப்படுகின்றன.

### குறைந்த செலவில் வீடுகள்

குறைந்த செலவிலான புதிய வீடமைப்புத் திட்டங்கள் மூலம் நாடுமுழுவதிலும் 1,418 வீடுகளை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவைகள் தனிவீடுகளாக அன்றேல் மாடிவீடுகளாக இருக்கும். யாழ்ப்பாணத்திலே குருநகரில் 68 குடும்பங்கள் வசிக்கக்கூடிய வீடுகள் அமைக்கப்படும்.

### புத்தள உபதேர்தல்

பாராளுமன்றத்திலே காலியாகவிருக்கும் புத்தளத்தொகுதி உபதேர்தலுக்கு நியமனப்பத்திரங்கள் சமர்ப்பிக்கும் திகதியானது தற்பொழுது நடைமுறையிலுள்ள அவசரகால நிலைமையை முன்னிட்டுக் காலவரையின்றிப் பின்போடப்பட்டுள்ளது. அபேட்சகர்கள் நியமனப் பத்திரங்கள் சமர்ப்பிக்கும் தினம இந்த ஆடிமாதம் 10ஆம் திகதியென முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

### மீன்பிடி தொழில் திட்டம்

அதிக மீன்பிடிப்பது, மீனிலே நாடு தன்னிறைவு காணச் செய்வது, பிறநாடுகளிலிருந்து டின்மீன், கருவாடு இறக்குமதி செய்வதை நிறுத்துவதன் மூலம் அந்நியச் செலாவணியைச் சேமிப்பது, மீனவர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது ஆகிய நோக்கங்களை அடிப்படையாக வைத்து மீன்பிடி தொழில் அபிவிருத்தித் திட்டம் ஒன்றை அரசாங்கம் செய்திருக்கிறது. இதனை நிறைவேற்றுமுகமாக நாடுமுழுவதிலும 54 ஆரம்பதாய்ச் சங்கங்கள் நிறுவப்படவிருக்கின்றன.

## ஆயிரம் தொன் கரும்பு

கந்தளாயிலே சீனிக்கூட்டுத்தாபன தொழிலாளர்கள் இப்போது நாளொன்றுக்கு ஆயிரம் தொன் கரும்புவெட்டி ஒரு சாதனையை நிலைநாட்டியுள்ளார்கள். இதுவரை நாளொன்றுக்கு 500 முதல் 600 தொன் கரும்புதான் வெட்டப்பட்டு வந்தது. கந்தளாயிலே இப்பொழுது தினமும் 75 தொன் சீனி செய்யப்படுகிறது. விரைவிலே இத்தொகை 100 தொன்னாக அதிகரிக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

" கர்த்தர் நகரத்தைக் காக்காவிட்டால் அதைக் காக்கிறவன் கண்விழிப்பது வீண்

✠

## 9ஆவது மரண நினைவு

"சீவியத்தில் நேசித்தோம் மரணத்தில் மறவோம்."

தோற்றம் 18-12-1889 மறைவு 16-7-1962

இம் மண்ணில் மறைந்தாலும் எங்கள் இதயங்களில் என்றும் மறையாது எங்களை அன்புடன் கண்காணித்துப் பராமரித்த என் நேசக் கணவரும், எம் அருமைத் தந்தையும், எம் அருமை மாமனும், எம் அருமைப் பேரனும், என் அருமைச் சகோதரனுமான G. E. ஆரோக்கியசாமி (இராஜதுரை) கர்த்தரில் மரித்த ஒன்பதாம் வருடம் இம்மாதம் 16ஆம் திகதி நிறைவுறுவதால் இவரின் ஆன்ம இளைப்பாற்றிக்காக மாதகல் புனித தோமையார் ஆலயத்தில் 16ஆம் திகதி காலை 6-15 மணிக்கு திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

இதைக் காணும் குருக்களும், கன்னியர், இனசனர், சிநேகிதர் மற்றும் அனைவரும் இவரின் ஆன்மஇளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவன்புடன் வேண்டுகிறோம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், சகோதரி.

"இம்மானுவல் லொட்ஜ்"
மாதகல்.

✠

## 12ஆம் வருட மரண ஞாபகம்

### திருமதி ஆன். அருளானந்தம்

பிறப்பு: 26-4-1927. இறப்பு: 8-7-1959

"என்னுடைய சீவியம் நீர்க்குமிழிபோலத் தோன்றி மறைந்தது. என்னைச் சீவியத்தில் நேசித்தவர்கள் மரணத்திலும் மறவாதீர்கள்.

எம்மை விட்டுப் பிரிந்தாலும் எம் மனதைவிட்டு என்றும் பிரியாத எமது திருமதி ஆன் அருளானந்தத்தின் நினைவுதினத்தன்று இவவின் ஆன்ம சாந்திக்காக வல்வெட்டித்துறை புனித செபஸ்தியார் ஆலயத்தில் ஆடி மாதம் 8ஆம் திகதி வியாழக்கிழமை காலை 6-30 மணிக்கு ஒரு துக்கப் பாடற்பூசை ஒப்புக்கொடுக்கப்பட்டது. இதைக் கண்ணுறும் வண. குருமார், சங். சந்நியாசர், கன்னியர், உறவினர் சிநேகிதர் அனைவரும் இவவின் ஆன்ம இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவவின் பிரிவால் துயருறும் கணவன், தாய், சகோதரர், சகோதரி, பிள்ளைகள்

## ஏற்றுமதியும் இறக்குமதியும்

இவ்வருடத்தின் முதல் மூன்று மாதங்களிலும் இலங்கையின் இறக்குமதி செலுவாகக் குறைய, ஏற்றுமதி அதிகரித்திருக்கிறது. இறக்குமதி 19 கோடி ரூபாவால் வீழ்ச்சியடைய, ஏற்றுமதி சுமார் 5 கோடியே 70லட்சம் ரூபாவால் அதிகரித்திருக்கிறது. இதற்குக் காரணம், அரசாங்கம் இறக்குமதிப் பொருட்களின் விகிதத்தைக் குறைத்ததும், ஒ. ஜி. எல். முறையை நிறுத்தியதுமேயாகும்.

# இறைவனின் அருஞ்செயல்

அது ஓர் அமைதியான இடம். அங்கே ஒரு கன்னியர் துறவறமடம். அத்துறவற மடத்தில புத்தம்புதிய சிற்றாலயம், அங்கே நடந்தேறியது ஒரு குருத்துவ அபிஷேகம், மிகவும் அமைதியாக அடக்கமாக நிறைவேறியது இத் திருச்சடங்கு. இத்தேவதிரவிய அனுமானத்தைப் பெற இறைவனால் அழைக்கப்பட்டவர் சங்கைக்குரிய சகோதரர் செலஸ்ரின் பஸ்ரியாம்பிள்ளை ஆவர்.

காரம்பனைத் தாயகமாய்க் கொண்டவரும் காலஞ்சென்ற மனவற்பிள்ளை பஸ்ரியாம்பிள்ளை, மேரியோசேப்பினு ஆகியோரின் புத்திரருமான இவர் சம்பத்திரிசியார் கல்லூரியின் முன்னாள் ஆசிரியரான திரு. எஸ். எவ். சந்தியாப்பிள்ளை அவர்களின் மருகராவர், சம்பத்திரிசியார்கல்லூரியிலே கல்வி பயின்ற வண. செலஸ்ரின் அடிகளாரின் குருத்துவ அழைத்தல் வியப்புக்குரியதாகும், யாழ்ப்பாணம புனித மாட்டீன் செமினரியில் பயின்ற இவர் 1949-ம் ஆண்டு கண்டி பெரிய குருமடத்துக்கு அனுப்பப்பட்டார். அங்கு குருத்துவத்துக்குரிய கல்வியைப் பயின்று வருங்காலை தன் மனத்தில் எழுந்த ஐயப்பாட்டினால் 1952-ம் ஆண்டு குருமடத்தில் நின்று தாமாகவே வெளியேறினார். பின்பு சிலகாலம் ஆசிரியராகவும், கொழும்பில் ஓர் கம்பனியில் லிகிதராகவும் கடமையாற்றினார். ஆயினும் தமக்கு அழைத்தல் கிடைக்க வேண்டுமென்று வெவ்வேறு வழிகளில் தன்னை ஒறுத்து மனதை ஒருநிலைப்படுத்த முயன்றார். முதலில் இந்தியாவிலும் பின தோலகட்டி செபமாலைத்தாசர் சபையிலும் தாம் குருவாக வேண்டுமென்று பயிற்சியில் ஈடுபட்டார். செபமாலைத்தாசர்சபையிலும் குருவாகும வாய்ப்பு இல்லை எனபதை உணர்ந்து பின் காலி மேற்றிராணியாரிடம தமது ஆவலை வெளிப்படுத்தினார். அவர் மனமுவந்து இவரை ஏற்று 1967-ம ஆணடு மீண்டும் கண்டி பெரிய குருமடத்துக்கு அனுப்பி வைத்தார். அயராது தவங்கிடந்து இந்த அரிய பதவியை சென்ற ஆனி 15-ம தேதி பெறும் பேறுபெற்றார்.

இப்புதிய குரவர், ஆடம்பரம எதுவுமின்றி, காலியில கெலகாலை என்னுமிடத்தில் உள்ள கார்மேல்சபை கன்னியர் மடாலயத்தில் காலி மேற்றிராணியார் வங். அன்ரனி சேரம் ஆண்டகை அவர்களால் குருத்துவ அபிஷேகம் செய்யப்பெற்றார். கன்னியரும், குருமாரும், குருத்துவமாணவரும், அவரது சகோதர சகோதரிகள், தாய்மாமன் உட்பட உறவினரும் இத்திருச்சடங்கில பங்கு கொண்டனர். மறுநாள் 16-6-71-ல் இதே மடாலயத்தில் தமது முதற் பூசையை நிறைவேற்றினார். இப்புதிய குருவை சுமார் 22 வருடங்களின்பின் மீண்டும் இந்த உன்னத பதவிக்கு அழைத்தது இறைவனின் ஆச்சரியமான செயலன்றோ. தமது 41வது வயதிலே குருத்துவத்தை ஏற்றுக்கொண்ட வண. செலஸ்ரின அடிகளாரின் அயரா உழைப்பும் விடாப்பிடியாகத் தான குருவாக வேண்டுமென்று ஆசித்து முயன்று வந்த மனச்சோர்வற்ற மனப்போக்கும் உறுதிப்பாடும் நம் இளைஞர் சமுதாயத்துக்கு சிறந்தவோர் எடுத்துக்காட்டாகும். எல்லாம் வல்ல இறைவனின் இவ் அருஞ்செயலுக்கு இறைமக்கள் நன்றி கூறுவது கடனே. வாழ்க புதியகுரவர்!

—நிருபர்.

## றோமன் கத்தோலிக்க சமயவிவகாரச் சிறுகதைப் போட்டிகளின் முடிவு

மேற்படி குழுவால் நடாத்தப்பட்ட சிறுகதைப் போட்டியின் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன. அண்மையில் மட்டுநகரில் நடைபெறவிருக்கும் எழுத்தாளர் விழாவில், கீழே காட்டப்பட்டுள்ள ஒழுங்கின்படி 1ஆம், 2ஆம், 3ஆம் இடங்களுக்கு முறையே ரூபா 125/-, ரூபா 100/-, ரூபா 75/- பரிசாக வழங்கப்படும். இதுபற்றிய விபரங்கள் சமீபத்தில் பத்திரிகைகள் மூலம் வெளியிடப்படும்.

| சிறு கதைகள் : | ஆசிரியர்கள் : |
|---|---|
| 1. இது பாவமா? | திரு. எஸ். ஜெயராஜா, உப—தபால் அலுவலகம் கோட்டைமுனை, மட்டக்களப்பு. |
| 2. மங்காத மணிவிளக்கு | திரு. ம. ஜீவரெத்தினம், 93, சீர்கொழும்பு வீதி, வத்தளை. |
| 3. ஒளியுள் இருள் | திரு. சி. இம்மனுவேல், காத்தான் குளம், அடம்பன். |

இவற்றைவிட மேலதிகமாக, அடுத்ததாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள பின்வரும் இரு கட்டுரையாளர்களுக்கும் ரூபா 50/-வீதம் ஆறுதல் பரிசுகள் வழங்கப்படும்.

| | |
|---|---|
| 1. பாலன் பிறந்தான் | திரு. கருமலை, 37, ஜப்னு ஸ்ரோர்ஸ், கிவித்திகல. |
| 2. அருணோதயம் | திரு. வீரசாமி, த. பெ. எண் 820, கொழும்பு. |

53, எலிஹவுஸ் வீதி,
கொழும்பு 15.
8-7-71.

ஜே. டி. மத்தாயஸ்,
கௌரவ செயலாளர்

### இளவாலையில்
## மறைக்கல்விக் கருத்தரங்கு

காலையில் உதித்த ஆதவன் மாலையில் மேற்கே மறைந்தான். மறுநாள் 28-ந்தேதி எப்போது வரும், எப்போது இந்த இருள் என்ற அரக்கன் அகல்வான் என்று மக்களினம் பார்த்து நின்றது. பொழுது விடிந்தது; காலை ஒன்பது மணி. இளவாலை, பண்டத்தரிப்பு, சில்லாலை, மாதகல், விளான் போன்ற ஊர்களிலிருந்து மக்கள் இளவாலை, புனித ஹென்றிஅரசர் கல்லூரியை நோக்கி விரைந்தனர். காரணம், அங்கு நடைபெற இருக்கும் "மறைக்கல்விக் கருத்தரங்கிற்கே." சரியாக 9 மணியளவில் திருச்சபையை வழிநடத்தும் புனித ஆவியின் அருள்வேண்டி புனித ஆவியின் பாடல் இசைக்கப்பட்டது. பின் மறைநூல் வழிபாடு நடத்தப்பட்டது. தொடர்ந்து மறைக்கல்வி இயக்குனர் வண. ஜி. ரி. பாலசுந்தரம் அடிகளார் தொடக்கவுரையும், அதைத்தொடர்ந்து இன்றைய நிலையில் மறைக்கல்வி, அதைத் திறம்படச் செய்வதற்குரிய வழிவகைகள் இவைகள்பற்றி உரை நிகழ்த்தினர். கருத்தரங்கில் நூற்றுக்கதிகமானவர்கள் பங்கு கொண்ட பொழுதிலும் ஆண்களின் தொகை மிகக் குறைவாகவே இருந்தது. இவர்கள் ஒன்பது பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆய்வுக்காக விடப்பட்டனர்.

மாலையில் மறை ஆசிரியர் எஸ். எவ். சவுந்தரம் திருமறைக் கல்விச் சபையைப்பற்றி மாதிரிப் பாடம் நடத்தி விளக்கவைத்தார். அதைத்தொடர்ந்து சங். சகோதரி மரிய ஜேசா அவர்கள் வேதாகமம் கிறிஸ்தவ குடும்பத்தில் வகிக்கவேண்டிய இடம் என்ன என்பதுபற்றி உரையாற்றினார். அதனைத் தொடர்ந்து பொதுமேடை விவாதம் நடைபெற்றது. இரவு யேசுநாதர் என்னும் திரைப்படம் காண்பிக்கப்பட்டது.

மறுநாளும் (30-6-71) புதிய முறையில் மறைக்கல்வி என்ற பொருளில் சுவாமியவர்களின் உரையைத் தொடர்ந்து ஆய்வுகள் நடைபெற்றன. ஆசிரியர் லோறன்ஸ் அவர்கள் முதன்நன்மைக்குத் தயாரிப்பான ஒருமாதிரிப்பாடம் நடத்திக் காட்டினார். தொடர்ந்து யாழ். பேராலயச் சிறுவர்களால்மறைபரப்புப்பணியில் பல்வேறு செயல் திட்டங்களை விளக்கும் இனியதொரு இசை-உரை நாடகம் நடித்துக் காண்பிக்கப் பட்டது. பொதுமேடையில் மறைக்கல்விச் சபை பற்றிய தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது. சபையின் நன்றியைத் தொடர்ந்து மறைக்கல்வி இயக்குனர் சுவாமிகள் கருத்தரங்கை ஒழுங்குசெய்த அருட்திரு.குணசீலன் அடிகளார்க்கும், பங்கு கொண்டவர்க்கும் நன்றி தெரிவித்தார். கடைசியாக, இறைஆவிக்கு நன்றிகூறிக் கருத்தரங்கு இனிதே முடிந்தது.

ச. வின்பிறட், (மறை ஆசிரியர்)

## தெய்வ சித்தம்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வகாதர் எல்லாருமே தலைகீழாகச் சுற்றுகிறார்கள். கமலமரியா? சாந்தியா? யாரை நான் மணக்கவேண்டும்? கமலமரியை மணந்து அன்னையை மகிழ்விப்பதா? சாந்தியை மணந்து அமலனை மகிழ்விப்பதா? இரண்டு மூன்று நாட்களாக என்னுள் ஓயாத போராட்டம் நடைபெறுகிறது இறுதியில் ஒரு முடிவுக்கு வருகிறேன், அந்த முடிவை அடிகளுக்கு அறிவிக்கிறேன். நாத்திகன் யேசுதாசன் இறைவனுடன் சமாதானம் செய்து கொண்டு, நிம்மதியாகக் கண்ணை மூடுகிறார். நான் சாந்தியை மணக்கிறேன். இதுவரை என் மனைவி சாந்தி எழுதிவந்த சிறுகதை முடிவு பெறுகிறது. கதையை வாசித்து முடித்த நான் எதிரே அமர்ந்திருந்த சாந்தியை அர்த்தபுஷ்டியுடன் நோக்குகிறேன். அவள் என்மீது விஷமப் புன்னகையைச் சிந்துகிறாள்.

✠

## மூன்றும் வருட ஞாபகதினம்

### திருமதி மரியம்மா இராசேந்திரம்

மறைவு—13-7-1968

ஆண்டு மூன்று ஆனாலும் அம்மா, உன்னை இதயம் மறக்கவில்லை கண்ணில் கண்டோம்; உன் அன்பு முகம், ஆனால், அன்பான அரவணைப்பைக் காணவில்லை. அம்மா எனது அழைத்த ஒலி அடங்கியது.

எம் வீட்டில்

அம்மா என்ற அழுகை ஒலி எழுந்தது அந்தோ. போன திசை தெரியாது இன்று புலம்பி, உள்ளம் உடைகின்றோம். தேவா—உன் சந்நிதியில் ஆளதொரு தானமதில், அன்னைத் திடமாய் இருத்தி பொன்று வல்லபரன் பாதம் தாழ்ந்து பரனை வேண்டுகின்றோம், கேட்பீர் அம்மா.

இவரது ஆன்ம சாந்திக்காக ஆடி 13ஆந் திகதி காலை 6 மணிக்குத் திவ்விய பாடற் பூசைகள் திருகோணமலை மாதா கோவிலிலும், மட்டக்களப்பு ஆசனக் கோவிலிலும், யாழ்ப்பாணம் புனித ஸ்நாபக அருளப்பர் கோவிலிலும் நடைபெறும்.

இதைக் கண்ணுறும் யாவரும் இவ்வாத்தும சாந்திக்காக மன்றுடும்படி கேட்கும்:

கணவன் எஸ். எ. இராசேந்திரம், (மக்கள்) றெமிஞ ஸ்ரெல்லா, பபியோலா, (மருமக்கள்) ஆர். ஸ்ரிவின், ஆர். எல். தருமப்பிரகாசம், எல். எ. குணநாயகம் (பேரப்பிள்ளைகள்) விஜே, நதி, இந்திரன், சேமுன்.

37, மாட்டின் வீதி,
யாழ்ப்பாணம்.

✠

## 5ஆம் வருட மரணஞாபகம்

என் நேசப் பத்தாவும் எங்கள் அருமைத் தந்தையும் எங்கள் குடும்பஜோதியும் எங்களால் எக்காலத்தும் மறக்க இயலாத வகையில் நேசிக்கப்பட்ட யாக்கோப்பிள்ளை சவரிமுத்துவின் ஆத்துமம் இறைவன் திருநிழல் சேர்ந்த ஐந்தாவது வருடம் 15-7-71இல் பூர்த்தியாகிறபடியால் அன்று அச்சுவேலி புனித சூசையப்பர் தேவாலயத்தில் அவருடைய ஆன்ம இளைப்பாற்றிக்காகப் பாடற்பூசை ஒப்புக் கொடுக்கப்படும்.

இதனைக் கண்ணுறும் சங். குருக்கள், கன்னியர்கள், விசுவாசிகள் யாபேரும் இவ்வாத்தும நித்திய இளைப்பாற்றிக்காக வேண்டிக்கொள்ளுமாறு மிக வினயமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம்.

நேசப்பத்தாவை இழந்து பரிதவிக்கும் மனைவி றெசினு.

பிள்ளைகள்: மல்லிகா, மீனு, மினெற். [72-71]

# இளைஞர் உலகு



அன்புச் சோதரரே!

நாம் எடுத்த எடுப்பிலே எந்த ஒரு பெரிய காரியத்தையும் சாதித்து விடமுடியாது. சிறு சிறு காரியங்களைக் கவனமுடன் செய்து அவற்றிலே வெற்றி பெறமுயல வேண்டும். படிப்படியாக நாம் இதிலே வெற்றி காண்போமானால் பெரிய காரியங்களிலும் எமக்கு வெற்றிகிட்டும். பிறந்த குழந்தை ஒன்று உடனடியாக நடக்கக் கற்றுக் கொள்ளுவதில்லை. உடம்பை அங்கு மிங்குமாக அசைத்து முதலில் உடம்பு புரட்டுகிறது. பின்னர் கைகளை ஊன்றி எழுகிறது. தவழ்கிறது. கால்களை ஊன்றி எழுந்து நிற்கிறது. பொருட்களில் பிடித்துக் கொண்டு நடக்கிறது. பின்னர் பிறர் உதவியின்றி தானாக நடக்கிறது. சிறு காரியங்களில் வெற்றி பெறாவிட்டால் பெரிய காரியங்களிலும் வெற்றி பெறமுடியாது.

மேலும் எதனையும் நாம் சிறியது என்று ஒதுக்கி விடவும் முடியாது. எந்த பெரிய இயந்திரமும் அல்லது வண்டியும் சிறிய ஒரு பொருள் இல்லாமல் இயங்கவே முடியாது. ரூபா 400 அல்லது 500 பெறுமதியான ஒரு துவிச்சக்கர வண்டி 5 சதம் பெறுமதியான வால்வ்ரியூப் இல்லாமல் ஓடமாட்டாது. இது போலவே ஒரு பெரிய மாட்டுவண்டியும் கடையாணி ஒன்றில்லாமல் ஓடமுடியாது. இது போலத்தான் எமது வாழ்வும். எனவே சிறிய காரியம் என்று அலட்சியம் செய்யாது எல்லாவற்றிலும் வெற்றியீட்டுவோமாக.

சோதரன்.

## மகனே! நீ வாழ்க

— கடிதம் —

மகனே! உன்னை நான் மகனே என்று அழைக்கக் கூடத் தகுதியற்றவள். குரு என்ற உயர் பதவி, இல்லை புனித பதவியில் இருக்கும் உன்னை மகனே என்று எப்படி அழைப்பது? இப்போ நீ ஒரு குரு—இறைவன் திருஉரு.

அன்று உன் தந்தையும் நானும் உனது முதல் பலியின்போது அடைந்த இன்பத்துக்கு அளவேயில்லை. ஒரு குருவின் பெற்றோர் என்று மற்றோர் கூறும் போது இதை விடவேறு இன்பத்தை எங்கு பெற முடியும்?

திருப்பலி நேரத்தில், அபிஷேகிக்கப்பட்ட உன் கரங்களால் யேசுவைப் பெற்ற போது நாம் அடைந்த இன்பத்தை எம்மால் கட்டுப்படுத்தவே முடியவில்லை. ஆம் "ஈன்றபொழுதில் பெரிதுவக்கும் தன் மகனை ஒரு குரு எனக் கேட்ட தாய்" கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய நீ தெரிவு செய்யப் பெற்றிருக்கிறாய். இதனை நான் உனக்காக மட்டும் எழுதவில்லை.

அந்தத் தோட்டத்தில் பணிபுரிய இன்னும் எத்தனையோ பேர் வேண்டப்படுகின்றனர். இளைஞர் பலர் இவ்வுன்னத பதவிக்குத் தகுதியுடையோராய் இருந்தும் இதனைப்பற்றி அக்கறையற்றிருக்கின்றனர். இவ்வுன்னத பதவியின் மாண்பையும் மகத்துவத்தையும் இளைஞர் உணர்வார்களாகில் இவ்வுன்னத அழைத்தலுக்குச் செவிசாய்த்து கிறிஸ்துவின் திராட்சைத் தோட்டத்தில் பணிபுரிய முன்வருவர்.

எல்லோருக்கும் இந்த அழைப்புக் கிட்டுமா? இந்த அழைப்புக் கிட்டாவிட்டாலும் பல்வேறு வழிகளிலும் கிறிஸ்துவின் பணிபுரியலாம். பக்திச்சபைகள் பலபங்கு தோறும் இருக்கின்றன. இவற்றில் சேர்ந்து பாங்கான பணி பல புரியலாம்.

ஏன் இது பற்றி எழும் சந்தேகங்களை பங்குக்குருவரிடம் சென்று தீர்த்துக் கொள்ளலாம். ஆனால், பங்குக்குருவர் என்றால் பல இளைஞருக்கும் பாகற்காய் தான். ஆனால், புதிய குரவர் என்ற ரீதியில் இளைஞர் பலர் உன்னை இப்போ வட்டமிட்டுக் கொண்டிருப்பர். உன்னிடம் இப்போது அனுபவம் இல்லை என்றாலும் அனுபவம் நிறைந்த கட்டளைக்குரவர் கண்காணிப்பில் அவர்களை ஒப்படைத்து விடு. அவர்களை அவர் நல்ல வழிக்கு இட்டுச் செல்வார்.

ஒரு குரு என்ற முறையில் அல்ல மகன் என்ற முறையிலே இவற்றை நான் கூறினேன். இவ்வேளை உனது உற்றார் உறவினரையும் உனக்கு உதவி புரிந்தோரையும் நண்பர், வாழ்த்துத் தெரிவித்தோர் அனைவரையும் மறந்து விடாதே. இவ்வேளை நான் அதிகம் எழுத விரும்பவில்லை. நாளாந்தபலியில் எம்மை மறந்துவிடாதே. மகனே நீ பல்லாண்டு வாழ்கஎன வாழ்த்தும்.

உன் அன்பு
அன்னை

* முதற்பலி நிறைவேற்றிய தன் மகனுக்கு அன்னை எழுதிய கடிதம்:

தயாரிப்பு! திராட்சையூரான்

## இளைஞர் காவலர்

கத்தி முனையில் கற்பைக் காத்த கன்னி புனித மரிய கொறற்றியின் திருநாளை திருச்சபை கடந்த 6-7-71-ல் கொண்டாடி மகிழ்ந்தது. இளைஞரின் பாதுகாவலியான புனித மரிய கொறற்றி இளைஞர் உலகிற்கு ஓர் எடுத்துக் காட்டாகத் திகழ்கின்றார்.

## தாத்தா கூறியது:

"பேனா"

இளைஞன்: ஓ, தாத்தாவா? வாங்கோ வாங்கோ .. என்ன இந்தப்பக்கம்?

தாத்தா: இந்த இளைஞர் உலகை ஒருக்காப் பாத்திட்டுப் போவம்.

இளைஞன்: அப்ப ஏதோ சொல்லத்தான் வந்திருக்கிறியள்.

தாத்தா: சொல்லவேண்டியது அதிகம் இருக்கு; ஏதோ முடிந்த அளவு சொல்லுறன்; ஆனால்

இளைஞன்: ஆனால் ..என்ன தாத்தா?

தாத்தா: உண்மையைச் சொல்லுறன்; என் மீது கோபிக்க மாட்டியதானே?

இளைஞன்: இப்பிடித் தேடி வந்த தெய்வத்தை நாங்கள் கலைக்கிறதெண்டால்...

தாத்தா: தம்பி, இப்பகனக்கச் சொல்ல எனக்கு நேரமில்லை; முக்கியமானதை முதலிலை சொல்லுறன் கேள். அந்தக் காலத்திலை இளம் பெடியங்கள் பெரிய மனுஷருக்குக் காட்டுற மரியாதை. இப்ப என்னண்டால் படிப்பிக்கிற வாத்தியாரிட்டை சிக்கிறற்றுப்பத்த நெருப்புப் பெட்டி கேக்கினம். குருபத்தி எப்பிடியிருக்கு? ஏன் இப்ப ஞாயிற்றுக்கிழமை பூசைக்குப் போனால் எல்லாம் அறிஞ்சிடலாம், கோயிலுக்குப் போனால் நிண்டலிலை—பிரசங்கம் எண்டால் தேத்தண்ணிக் கடை—சற்பிரசாதம் குடுக்கேக்கை சிக்கிறற்றுக் குடி—முகப்பிலையும் றோட்டிலையும் நிண்டு முழுப்பூசை காணினம். தம்பி இப்ப ஒரேயடியா எல்லாத்தையும் அவிட்டுவிட்டால் என்னை ஒரு மாதிரி நினைப்பினம். மற்றமுறைக்கு வாறன்.

இளைஞன்: சரி, சரி இளைஞன் எண்ட முறையில் எனக்கும் இதுபற்றிக் கவலை தான். ஏதோ இளைஞர் உலகு நல்லாயிருக்கவேணும் என்ற நோக்கோடைதான் இதுகளைச் சொல்லுறியள். அடுத்தமுறைக்கும் தவறாமல் வந்துடுங்கோ தாத்தா ரொம்ப நன்றி.

தாத்தா: சரி வாறன் தம்பி.

'இளமையைப் பக்குவப் படுத்துவதில்தான் எதிர்கால வாழ்வு அமைகிறது'.

— திரு. வி. க.

இளமை, உற்சாகம், கனிவு இவை வசந்தகால நாட்கள் போன்றவை. என் இதயமே அவை விரைவில் மறையுமே என்று வருந்தாதே. அவற்றை விரைவில் அனுபவிக்க முயற்சி செய். — டெக்கார்ட்

சிறு கதை

# "தெய்வ சித்தம்"

(யோ. சே: நவரெத்தினராசன், சுண்டிக்குளி முருங்கன்.)

(முன் தொடர்ச்சி)

நான் குருமடம்சேர்ந்த மறு ஆண்டிலே என் கமலமரியும் துறவற ஆசைகொண்டு கன்னியர் மடம்புகுந்தாள், படித்தாள் — முடிவில் என்னைப் போலவே அழைத்தல் இல்லையென்று விடுவந்தாள். நான் குருவாக வேண்டும் என்று ஆசைப்பட்டேன் — முயன்றேன் — வருந்தி உழைத்தேன். அந்த எல்லையற்ற உழைப்பே எனதுஒயாத தலைவலிக்கு வித்திட்டது. முடிவில் இறைவனது திருச் சித்தத்திற்குத் தலைகுனிந்தேன், விடுவந்தேன். அதுபோலவே கமலமரியும் கன்னியர் வாழ்வில் ஆசைகொண்டாள்— முயன்றாள்— வருந்திஉழைத்தாள் முடிவு? அழைத்தல் இல்லையென்று விடுவந்துவிட்டாள்.

இன்று கமலமரி ஓர் ஆங்கில ஆசிரியை, தரித்திரம், கற்பு, அமைச்சல் என்ற எல்லைக் கோட்டுக்குள்ளே வாழ்ந்து, புனிதம்என்ற உச்சிமலை மீது ஏறமுயன்ற எனக்கும், அவளுக்கும் திருமணம்! இதுவரை என்னைவளர்த்து, ஆளாக்க அம்மாபட்ட வருத்தங்கள், துன்பங்கள், கவலைகள் யாவும் மறந்துபோய்விட்டது என் தாய்க்கு. இன்று அந்தத் தாய்உள்ளம் என் திருமணத்தைப் பற்றியே சதா நினைந்து நினைந்து இன்புறுகின்றது.

மரியதாசன் அடிகள் என்னோடு ஆரம்பக் குருமடத்தில் ஒன்றாகப் படித்தவர். இன்று அவர் இறைவனது குருவாகி, உள்ளூர்ப் பங்கிலே உதவிக்குரவராகப் பணிபுரிகிறார். நான் விடுமுறையில் வீட்டிற்கு வந்ததில்இருந்து பெரும்பாலும் மாலைவேளைகளை அவருடன் கழிப்பதுதான் என்வழக்கம். நேற்றுமாலை அவருடன் கதையாத்தபோது, இன்று மாலை முக்கியமான ஓர்இடத்திற்குத் தான் போகவிரும்புவதாகவும், நானும் தனனுடன் காரில் வரவேண்டும் என்றும் அன்புக்கட்டளை விடுத்திருந்தார். இன்றுமாலை என்னைப்பொறுத்தவரை ஒரு விசேடமான நாள். ஆம், என் தாய் என்று என் திருமணப் பேச்சை எடுத்தாளோ அன்றே சகாசகாய அன்னையை நோக்கி ஒரு நவநாள் ஆரம்பித்தேன். இன்று நவநாளின் இறுதிநாள். மாலைஆயிற்று; அம்மா போட்டுத்தந்த தேநீரைச் சுவைத்துப்பருகினேன். அப்போது சுவாமியார் எனக்காகத் தன் காரடியில் காத்திருப்பதாகப் பக்கத்துவீட்டுப் பையன்வந்து கூறினான். உடனே உடுப்பு மாற்றிக்கொண்டு குருமனைநோக்கி நடந்தேன், நான் காரை அடையவும் அடிகள் காரை இயக்கவும் சரியாக இருந்தது. காரின் கதவைத் திறந்து அதில்ஏறி சுவாமியார் அருகே அமர்ந்தேன். கார் வேகமாய் விரைந்து சென்று, ஊரின் புறத்தே அமைந்த அந்த வீட்டின்முன் நின்றது. நான் திகைத்தேன் — திடுக்கிட்டேன். என் திகைப்பை உணராதவர்போல் மரியதாசன் அடிகள் காரைவிட்டுக் கீழே இறங்கினர். எனக்கும் சைகைசெய்துவிட்டுவீட்டை நோக்கி நடந்தார், நானும்அவரைப் பின்தொடர்ந்து ஓசைபடாது மெல்ல நடந்தேன்.

அந்தவீடு யேசுதாசனுடையது. ஆளின் பெயர்தான் புனிதமானதே தவிர, உண்மையில் ஆள் வடிகட்டிய நாத்திகன். மழைக்குக்கூடக் கோயில்பக்கம்ஒதுங்க விரும்பாதவன். எத்தனையோ மேடைகளில் நமது மெய்மறையை,மத குருக்களை,மறைக் கொள்கைகளைக் காரசாரமாகத் தாக்கிப் பேசியிருக்கிறான். உளுத்துப்போன பழைய குப்பை கூழக்கதைகளாகப் புனைந்து பத்திரிகைகளில் வெளியிட்டிருக்கின்றான். மதமூடநம்பிக்கைகளை இப்பூவுலகையே விட்டுக்களைக்தெறியும்நோக்கோடு தனிப் பத்திரிகையே சொந்தத்தில் நடத்தி இளைஞரைக் கெடுத்திருக்கிறான். ஏன், இவற்றிற்கு மேலாக நோய் கண்டு பாயும் படுக்கையுமாகுமட்டும், நாத்திக, உலோகாயக் கொள்கைகளை முன்வைத்து நாடாளுமன்றத் தேர்தலுக்கே நின்றிருக்கிறான்.

இவ்விதமாக என் மனத் தடாகத்திலே எண்ண அலைகள் வந்து வந்து மோதுகையில், "வாருங்கள்" என்று வாசல்வரை வந்து வரவேற்று, தந்தை நோயுற்றுக் கட்டிலில் படுக்கையாய்க் கிடக்கும் உள்ளறைக்கு எங்களை இட்டுச் செல்கிறாள், சாந்தி. அங்கு கட்டிலில் எலும்பும் தோலுமாக உருமாறிக் காட்சிதரும் யேசுதாசனைக் கண்டதும் எனக்கே பரிதாபமாக இருந்தது. இன்றோ, நாளையோ உலகைவிட்டுப் பிரிந்துவிட அவர் உயிர்ப்பறவை துடித்துக் கொண்டிருந்தது. ஆனால், அவர் எதையோ, உலகில் இறுதியாக முடித்துவிட விரும்புவது போல் அவர்முகம் விளங்கியது, கட்டிலின் அருகே தந்தையையே பார்த்த வண்ணம், சோகமே வடிவாகக் காட்சிதந்த சாந்தியைக் கண்டதும், அவர் சாதிக்க விரும்புவது எது என எனக்கே விளங்கியது. திடீரென என்மனக் கண்முன்னே, பழைய கம்பீரத்துடன் யேசுதாசன் தோன்றுகிறார். "கடவுள் எனது பழைய நாத்திக வாழ்வை மறந்து மன்னிப்பது உண்மையானால்— என்னையும் தனது மோட்சராச்சியத்தில் சேர்த்துக் கொள்ள விரும்புவது உண்மையானால்—என் இறப்பின்பின் திக்கற்று நடுத்தெருவில் நிற்கப்போகும் என் ஒரே மகள் சாந்தியை மணக்க உத்தமகத்தோலிக்க இளைஞனை அனுப்பட்டும். அப்போது நான் இறைவனுடன் சமாதானம் செய்து கொள்கிறேன்" என்று ஆவேசம் வந்தவரைப்போல் கத்துகிறார். எனக்கு உலகமே தலைகீழாகச் சுழல்வதுபோல தோன்றுகிறது. அந்தச் சுழற்சியிலே, என் கமலமரி, என் தாய், செல்வந்தர் செல்

(தொடர்ச்சி 2-ம் பக்கம்)

## தலையங்கம்

கொழும்புத் தகுதிவாய்ந்த அதிகாரியின் அனுமதி பெற்றபின்பே ஆசிரிய தலையங்கங்கள் பிரசுரஞ் செய்ய வேண்டியிருப்பதாலும், யாழ்ப்பாணத்திலிருந்து வெளி வரும் எங்கள் பத்திரிகை அதிகாரியின் அங்கீகாரத்தை உரியநேரத்தில் பெறுவது இயலாமையாலும் சிலவாரங் களுக்கு ஆசிரியத் தலையங்கங்கள் வெளிவரமாட்டாது என்பதை வாசகநேயர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளு கின்றோம்.

*சத்தியவேத பாதுகாவலன்*

# இறைவனில் நம்பிக்கை

"இறைவனில், நம்பிக்கைவைத்து, நன்மை செய்யுங் கள். அங்ஙனமே நீங்கள் பூமியில் வாழ்ந்து ஆகாரத்தைப் பெற்றுக்கொள்ளுவீர்கள்" என்று இறைவாக்கினர் ஒருவர் கூறுகிறார். தினந்தோறும் எத்தனையோ துன்பங்கள் கவ லைகள், பிரச்சினைகள் எழுந்துகொண்டேயிருக்கின்றன. யாரையாவது சந்திக்கும்போது மகிழ்ச்சிகரமான வார்த்தை களைக் கூறுவதற்குப் பதில் எமது இடைஞ்சல் இக்கட்டு களைப்பற்றி முறையிடத்தான் தயாராக இருக்கிறோம். மனி தர்களுடைய பேச்சிலே இடம்பெறும் கவலைச்சுமையைப் பார்த்தால், எம்மீது கரிசனையும், கருணையும் கொண்ட எப் போதும் எமது முறையீடுகளுக்குச் செவிசாய்த்து எமக்கு உதவிபுரியக் காத்திருக்கும் ஒரு தெய்வம் இல்லையோ என்று எண்ணத் தோன்றும்.

சிலருக்கு உண்மையான கவலைகள் உண்டு, சிலர் கவலை களை வலியத் தேடிக்கொள்கின்றனர். வேறுசிலர் இல்லாத கஷ்டங்களையெல்லாம் கற்பனைசெய்து அஞ்சுகிறார்கள். இவ்விதம் சதா சஞ்சலத்தில் மூழ்கியிருக்கும் அவர்கள் இறைவனுடைய பராமரிப்பில் தாம் உள்ளதை எண்ணிப் பார்க்கக்கூடாதா? அவருடைய அன்புக்கு அடையாளமான எத்தனையோ பொருட்கள் அவர்களைச் சுற்றிக் காணப்படு கின்றன. ஆனால் இந்த ஆசீர்வாதங்களெல்லாம் அவர்க ளுடைய கண்களிற் படுவதில்லை. எப்போதும் அவர்களு டைய மனம் துன்பகரமான விடயங்களிலேயே குடிகொண் டிருப்பதால் இறைவனுக்கு நன்றிசெலுத்தவேண்டிய எத் தனையோ நன்மைகளைக் கண்டும் காணாதவராகிறார்கள். வாழ்வில் வரும் இடையூறுகளெல்லாம் அவர்கள் இறைவ னுடைய உதவியை நாடிச்செல்வதைவிட்டு அவரை விட்டு விலகிப்போகவே காரணமாகின்றன.

நாம் ஏன் இப்படி அவிசுவாசிகளாயிருக்கவேண்டும். இவ்விதம் நம்பிக்கையற்றவராயும் நன்றிகெட்டவராயும் இருக்கவேண்டும். இறைவன் எமது தந்தை பரலோகம் முழுவதுமே எமது நன்மையில் அக்கறை கொண்டிருக்கின் றது. காளாந்த சீவியத்தில் ஏற்படும் கவலைகளால் எம் மனதில் இருள் சூழவிடலாகாது. எமது துன்பதுயரங்களை தாங்கிக் கொள்வதற்கு உதவி செய்யாமல் எம்மைச் சஞ்சலப்படுத்தி அவநம்பிக்கை கொள்ளச் செய்யும் கவலைகளை நாம் அறவே நீக்கவேண்டும். எத்துன்பம் நேரிட்டபோதும் அமைதி யோடிருந்து நிலைமையைச் சீர்ப்படுத்த எம்மாலானவற்றைச் செய்தல் வேண்டும். அவ்வேளையில் விவேகத்தையும் மனத் தைரியத்தையும் தருமாறு இறைவனிடம் மன்றாடுவோம். கடவுள் நமக்குத் துணைபுரிவதாக வாக்குப்பண்ணியிருக் கிறார். ஆனால், எமது முயற்சி இல்லாமல் அவர் அதைச் செய்யப்போவதில்லை.

இறைவன் எம்மை ஏமாற்றவில்லை, பாவமும், துயர மும் இல்லாத ஒரு உலகத்தை எமக்குத் தருவதாகக் கூற வில்லை. எத்தனையோ சோதனைகளும் ஆபத்துக்களும் உண்டு என்பதை அவர் அறிவார். அவற்றின் மத்தியிலே அகப்படாமல் வாழுவதற்கு எமக்கு வேண்டிய உதவியைப் புரிவதாகவே கூறியிருக்கிறார்.

கிறிஸ்துநாதர் தமது சீடர்களுக்கு ஆகாயத்துப் பட்சி களைச் சுட்டிக்காட்டினார். கவலையின்றி இசை பாடிக்கொண்டு ஆகாயத்தில் சுதந்திரமாகப் பறந்து திரிந்த அப்பறவை களைப்போல் மனிதரும் சஞ்சலமின்றி வாழவேண்டும் என்று கூறினார். ஆனால், அவர்கள் முயற்சியின்றி இருக்கவேண்டு மென்று கூறவில்லை. ஆகாயத்துப் பறவைகளுக்கு இறை வன் உணவளிக்கிறார் என்பது உண்மையே. ஆனால், அவ் வுணவு முயற்சியின்றிக் கிடைப்பதில்லை. அப்பறவைகள் இரை தேடவேண்டும், கூடுகளை அமைக்க வேண்டும். குஞ்சுகளை வளர்த்துப் பாதுகாக்க வேண்டும். இந்த வேலை களிருந்தும் அவை மகிழ்ச்சிகரமாகப் பாடிக்கொண்டு செல் கின்றன. அப்பறவைகளிலும் உயர்ந்த சிருஷ்டிகளான, அழியா ஆத்துமமும், மேலான அறிவும் கொண்ட மனிதன் இறைவனின் பராமரிப்பில் நம்பிக்கையற்றுச் சோர்ந்திருப் பானேன்.

# திரித்துவ ஞாயிறு ஞானஉபதேச தினம்

திரித்துவ ஞாயிறை ஞான உபதேச தினமாகக் கூறப்பட் டதைக் கேள்விப்பட்டு மிக வும் மகிழ்ச்சி கொண்டேன். ஆனால் இக்கருணத்தில் திரித் துவத்திற்கு ஞானஉபதேசத் தில் சரியான இடம் எங்கள் ஞானஉபதேசிமார் கொடுக்க வேண்டுமென்று விரும்புகின் றேன். பரிசுத்த திரித்துவம் கத்தோலிக்கத்துவத்தின் மை யமான உண்மைஎன்று எல் லோரும் ஒத்துக்கொள்ளுகி றார்கள். என்றாலும் அந்த உண்மை சாதாரண கிறீஸ்த வர்களுடைய சீவியத்தில் யா தாமொரு பயனையும் வருவித் ததாகக் காணவில்லை. இந்த நிலைபரம் மிகவும் மோசமான தாயிருக்கிறது. இதற்கு மருந் து திரித்துவத்திற்கு ஞான உபதேசபாடத்திட்டத்திலே மையமான இடம்கொடுப் பதேஎன்று எனக்குத் தோற் றுகிறது. அதனோடு பாடத் திட்டத்தின் எல்லாப் பகுதி களும் தொடுசல் வைத்திருக் க வேண்டும். எனது அபிப்பி ராயம் பின்வருமாறு:

தொடக்கத்தில் பிதா, சுதன், பரிசுத்தஆவி எங்களை நேசிக்கிறார்கள்; நாங்களும் அவர்களை நேசிக்கவேண்டும் என்பதைவற்புறுத்திச்சொல் லவும்.

1-வது பிதாவின் சிருட் டிப்புப் பராமரிப்பைப்பற்றிச் சொல்லுகிற விசுவாச மந்தி ரத்தின் முதலாம் பகுதியை யும், அதோடு தொடர்ந்து பிதாவின் பராமரிப்புக் கருவி களாகப் பாவிக்கிற கர்த்தரு டைய செபத்தின் 7செயற்பிர சாதங்களையும் படிப்பிக்கவும்.

2-வது சுதனின் இரட்சணி யத்தைப்பற்றிச் சொல்லுகிற விசுவாச மந்திரத்தின் இரண் டாம் பகுதியையும், அதோடு தொடர்ந்து சுதனின் இரட்ச ணியக் கருவிகளாகப் பாவிக் கிற 7திருஅனுமானங்களையும் படிப்பிக்கவும்.

3-வது பரிசுத்த ஆவியின் அர்ச்சிப்பைப்பற்றிச் சொல் லுகிற விசுவாசமந்திரத்தின் மூன்றும் பகுதியையும், அதோடுதொடர்ந்து பரிசுத்த ஆவியின் அர்ச்சிப்புக் கருவிக ளாகப் பாவிக்கின்ற 7புண்ணி யங்களையும் (அல்லது 10கற் பனைகளையும்) படிப்பிக்கவும்.

கடைசியாக ஒவ்வொரு கிரி யையும (1) பிதாவின் மகி மைக்காகவும், (2) சுதனின் மாதிரிகையின்படியும், (3) பரி சுத்த ஆவியின் பிரசாத நிலை யிலும் செய்துவரப் பயிற்சிப் படுத்தவும்.

B. W. J.

# நோக்கமில்லா வாழ்க்கையா?

மனிதராகிய நாம் இவ்வுல கில் பிறக்கிறோம், உண்ணு கின்றோம், உறங்குகின்றோம், உறவினரோடு கூடிக்குலாவு கின்றோம்; ஆம், இப்படித் தான் எமது வாழ்க்கை நாளாந்தம் கழிகின்றது. ஆனால், எவராவது நாம் வாழ் வதன் நோக்கம் என்ன? என்று கேட்டு அதற்கான, நியாயமான, உறுதியான, திர்க்கமான விடையை அறிய முன்வருகின்றோமா?

கடவுள் மனிதனைப் படைத் தார், ஆனால் அவர் மனிதனை என்ன நோக்கத்தோடு படைத்தார் என்று அந்த மனிதன் தன் மனப்பக்குவத் தால் கேட்டு, அதற்கான, முடிவான, அடிப்படையான விடையை அறிய முன்வரு கின்றானா? இந்த நேரத்தில் எனக்குப் பாடசாலையில், சமய பாடத்தில் படித்த கேள்வியொன்று மனதில் வருகின்றது. அது தான் 'கடவுள் ஏன் மனிதனைப் படைத்தார்? என்ற கேள்வி யாகும். உண்மையில் இக் கேள்விக்கு விடையறிய முற் படுங்கால் பல விசித்திரமான விடைகள்தான் கிடைக்கும்

ஒருவன் ஒரு பொருளைச் செய்தானேயானல், அப் பொருளைச் செய்தற்கு உண் மையிலேயே ஒரு உட்கருத் து, நோக்கம் இருக்கவேண் டும். அப்படி அந்த உட்க ருத்து, நோக்கமில்லாவிட் டால் அவன் செய்த பொரு ளினால் எதுவித பயனுமில் லாமல் போய்விடும். ஒரு கொப்பியைச் செய்தால், கொப்பியில் எழுதலாம் என்ற விடை எமக்குத் தெரி யவரும். பேனாவைச் செய் தால் பேனாவினால் எழுதலாம் என்ற விடை எமக்குத் தெரி யவரும். எனவே ஒவ்வொரு பொருளிலும் 'பயன்' என்ற மூன்று எழுத்திருக்க வேண்டும்.

எனவே நாம் ஒவ்வொரு வரும் 'என்ன நோக்கத்திற் காக வாழ்கிறோம்' என்ற கேள்வியைக் கேட்டு அதற் கான விடையை — அறுதி யிட்டுக் கூறக்கூடிய விடை யை தமது மனப்பக்குவத் தினால் தெரிந்து கொள்ளல் வேண்டும்.

எழுதியவர்: ப. ஜோசவ்

## பூசை வழிகாட்டி
### ஆடி — 1971

11. ஞாயிறு — ஆண்டின் 15-ம் ஞாயிறு [ப]
1ஆம் வாசகம்: உபா 30: 10—14
2ஆம் வாசகம்: கொலோ. 1: 15—20
சுவிசேஷம்: லூக். 10: 25—37

12. திங்கள் — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 1: 8—14, 22
சுவிசேஷம்: மத். 10: 34—11: 1

13. செவ்வாய் — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 2: 1—15
சுவிசேஷம்: மத். 11: 20—24

14. புதன் — புனித பொனவெந்தூர் [வெ]
வாசகம்: 2கொரி. 3: 1—6
சுவிசேஷம்: மத். 23: 8—11

15. வியாழன் — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 3: 13—20
சுவிசேஷம்: மத். 11: 28—30

16. வெள்ளி — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 11: 10—12: 14
சுவிசேஷம்: மத். 12: 1—8

17. சனி — நாள் பூசை [ப]
வாசகம்: யாத். 12: 37—42
சுவிசேஷம்: மத். 12: 14—21

## எம். பி. களுக்குக் கார்கள்

அரசாங்கத்தின் கையிருப் பிலுள்ள கார்களைப் பாராளு மன்ற எம். பி. களுக்கு வழங்க அரசாங்கம் தீர்மானித்திருப் பதாகத் தெரியவருகிறது. அரசாங்க பண்டகசாலையி லுள்ள இந்தக் கார்களை நியா யமானவிலையில் அதிகவட்டி யின்றி அவர்களுக்குக் கொ டுக்க அரசாங்கம் முன்வந் துள்ளது. ஒவ்வொரு காரும் சராசரியாக 35,000 ரூபா பெறுமதியுடையதாம். சொந்தமாகக் கார்கள் வைத் திராத 50 எம். பி. களுக்கு மட்டுமே முதலில் இந்தக்கார் கள் வழங்கப்படும்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20ஆம் இலக்க 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு. நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1971-ம் ஆண்டு ஆடி மாதம் 10-ந்தேதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப்பட்டது. தந்தி: "கதலிக்பிறஸ்," யாழ்ப் பாணம். தொலைபேசி: 300. தாபிதம்: 1876.